# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.12/2026

**Deposition of Witness for Prosecution PW 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாண்டியன் | Father's Name | : | வசந்தகுமார் |
| Village | : | கொத்தமங்கலம் | Taluk | : | நீடாமங்கலம் |
| Calling | : | | Age | : | 42 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of March 2026.**

**(A1 to A6 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது நீடாமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் கான்கிரீட் வேலை பார்த்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள், என் உறவினர்கள். எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் குடும்பத்திற்குமிடையே இடம் சம்மந்தமான பிரச்சனை இருந்து வந்தது. ஆஜர் எதிரிகளில் வீரப்பன் என்பவர் கோரையாற்றிலிருந்து மணல் கடத்தி வியாபாரம் செய்து வந்தார். இது சம்மந்தமாக

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.12 14:43:42 +0530

அவரை போலீசார் தேடி வந்தார்கள். அவர் மீது போலீசில் நான்தான் தகவல் கொடுக்கிறேன் என தவறாக புரிந்துகொண்டு என்மீது விரோதமாக இருந்து வந்தார். 26.01.2019 ம் தேதி இரவு 8.30 மணியளவில் நானும் என் நண்பர் பிரபுவும் மோட்டார் சைக்கிளில் முல்லைவாசலில் உள்ள என் தம்பி வீட்டிற்கு சென்றுவிட்டு 9.30 மணியளவில் திரும்ப வந்து கொண்டிருந்தபோது எதிரி இளையராஜா வீட்டு வாசலருகே பிரபு மோட்டார் சைக்கிளை ஓட்ட நான் பின்புறம் அமர்ந்திருந்தேன். வீரப்பன், இளையராஜா, அய்யப்பன் ஆகிய மூவரும் அருவாளுடனும் கோவிந்தராஜ் கம்பியுடனும் நித்யா, சந்தோஷ்குமாரி ஆகியோர் கையில் கட்டையுடனும் எங்களை வழிமறித்தார்கள். ஏன் எங்களை மறைக்கிறீர்கள் என கேட்டதற்கு இதோடு தொலைந்துபோடா என சொல்லி வீரப்பனும் இளையராஜாவும் ஆளுக்கொரு அருவாளால் என் தலையின் இடது பக்கத்தில் 2 வெட்டு வெட்டினார்கள். அதன் தழும்பு என் தலையில் உள்ளது. சாட்சி தலையில் உள்ள தழும்பை காட்டுகிறார். அய்யப்பன் என் இடது தொடையில் அருவாளால் வெட்டினார். சாட்சி தன் தொடையில் உள்ள காயத்தை காட்டுகிறார். கோவிந்தராஜ் என் இடது கை புஜத்தில் கம்பியால் அடித்தார். நான் கீழே விழுந்தவுடன் நித்யா, சந்தோஷ்குமாரி இருவரும் அவர்கள் வீட்டு வாசலில் கிடந்த பெரிய கல்லை

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:43:47 +0530

எடுத்து என் இடுப்பு மற்றும் விலா எலும்பில் போட்டார்கள். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. எதிரிகள் அனைவரும் இதோடு தொலைந்துபோடா உன்னை தொலைச்சால்தான் நாங்கள் நிம்மதியாக இருக்க முடியும் தேவடியா, குச்சிகாரி மகனே என திட்டினார்கள். என் பின்னால் வந்த என் தம்பி கரிகாலனையும் பிரபுவையும் கிட்டே வந்தால் உங்களையும் தொலைத்து விடுவோம் என சொல்லி மிரட்டினார்கள். நாங்கள் சத்தம் போடவே சத்தம் கேட்டு இளமாறன், சகுந்தலா, ஞானசெல்வி ஆகியோர் அங்கு ஓடிவந்தார்கள். அவர்களையும் எதிரிகள் சத்தம் போட்டால் உங்களையும் காலி பண்ணிவிடுவேன் என மிரட்டிவிட்டு எதிரிகள் அனைவரும் ஓடிவிட்டார்கள். அதன்பின் 108 ஆம்புலன்ஸ் மூலம் நீடாமங்கலம் மருத்துவமனைக்கு என்னை அழைத்து சென்றார்கள். பின் அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு என்னை அனுப்பி வைத்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் என்னுடையது, வெள்ளை பேப்பரில் நீடாமங்கலம் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கி கொண்டார்கள். அதில் உள்ள விபரங்களை நான் சொல்லவில்லை. என்னுடைய கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1**. நான் மருத்துவமனையில் சிகிச்சை முடித்து வெளியில் வந்து போலீசாரிடம் என் வழக்கு பற்றி விசாரித்தபோது வழக்கின் சட்ட பிரிவுகளையும் நபர்களையும் குறைத்து போட்டது அறிந்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:43:54 +0530

நான் தனிநபர் முறையீட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். என்னை நீதிமன்றத்தில் விசாரித்தபோது எனக்கு ஏற்பட்ட காயம் சம்மந்தமான புகைப்படம், இரத்தக் கறையுடன் கூடிய என்னுடைய சட்டை, மருத்துவமனையில் கொடுத்த விபத்து பதிவேடு, காயச்சான்று ஆகியவற்றை நீதிமன்றத்தில் ஆஜர் செய்தேன். அந்த புகைப்படம் **அ.சா.ஆ.2**. என்னை தாக்கிய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு நீடாமங்கலம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவரிடம் தனிநபர் முறையீடு மனு கொடுத்தேன். அந்த தனிநபர் முறையீடு மனு **அ.சா.ஆ.3**. என்னை தாக்கிய மற்ற இரு நபர்களையும் எதிரிகளாக இந்த வழக்கில் சேர்த்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் ஏற்கனவே இந்த வழக்கு சம்மந்தமாக நீடாமங்கலம் கோர்டில் சாட்சி சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணையில் வீரப்பன் என்பவர் கோரையாற்றிலிருந்து மணல் கடத்தி வியாபாரம் செய்து வந்து வியாபாரம் செய்து வந்தார் என்பது தொடர்பாக காவல் நிலையத்தில் வழக்கு எதுவும் வீரப்பன் மீது நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. அவர்கள் அதனால்தான் அனுமானமாக என்னை தவறாக புரிந்து கொண்டார்கள். எனக்கு நண்பருக்கும் உறவு முறைக்கும் வித்தியாசம் தெரியுமா என்றால் தெரியும். நான் முதல் விசாரணையில் சொன்ன ராஜ்குமாரின் மகன் பிரபு

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.12 14:44:00 +0530

என்பவர் எனது சொந்த பெரியப்பா மகன், சகோதரர் உறவு என்றால் சரி. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு முதன் முதலில் மருத்துவ சிகிச்சையில் சேர்ந்தபோது இரவு 8.30 மணிக்கு சம்பவம் நடைபெற்றதாக சொல்லியுள்ளேன் என்றால் சரி. என் வீட்டிலிருந்து சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் சுமார் 2 கி.மீ. தொலைவு இருக்குமா என்றால் இல்லை, சுமார் ½ கி.மீ. இருக்கும். சாதாரணமாக நான் என் வீட்டிற்கு செல்ல வேண்டுமானால் எதிரிகள் வீட்டை கடந்துதான் போக வேண்டும் என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடு கிழக்கு-மேற்கான ரோடு எனவும் குடியிருப்புகள் அதிகம் உள்ள இடம் எனவும் சொன்னால் சரி. நானும் ஆஜர் எதிரிகளும் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரி. எனக்கும் எதிரிகளுக்கும் சொத்து தொடர்புடைய பிரச்சனை இருக்கும் நிலையில் வழக்கு எதுவும் நிலுவையில் உள்ளதா என்றால் இல்லை. சொத்து என சொல்வது பூவனூர் அருள்மிகு சாமுண்டீஸ்வரி கோவிலுக்கு சொந்தமான சொத்து என்றால் சரி, அதில்தான் நான் உரிமை கோருகிறேன். மேற்படி சொத்து தொடர்பாக எதிரிகள் மீது எனக்கு வருத்தம் உண்டு என்றால் சரி. அந்த வருத்தத்தின் தொடர்ச்சியாக இந்த வழக்கு ஏற்பட்டது என்றால் சரி. நீடாமங்கலம் மருத்துவமனையிலிருந்து தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு நான் மேல் சிகிச்சைக்கு சென்றபோது மருத்துவரிடம் எனக்கு ஏற்பட்ட காயம் குறித்து

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:44:06 +0530

நான்தான் சொன்னேன். நான் கான்கிரீட் வேலைக்கு சென்றுவருவதால் மாலை நேரத்தில் எனக்கு மது அருந்தும் பழக்கம் உண்டு என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் மது அருந்தியிருந்தேன் என்றால் ஆமாம். அ.சா.ஆ.3 யை வழக்கறிஞர் தயார் செய்து கொடுத்தார் என்றால் சரி. எனக்கு போலீஸ் ஸ்டேஷன், நீதிமன்றம் ஆகிய இடங்களுக்கு அதிகம் சென்று வரும் பழக்கம் உண்டா என்றால் இல்லை. எனக்கு சட்டப் பிரிவுகள் குறைவாக உள்ளது என சொல்லும் வகையில் அது தொடர்பான விபரங்கள் தெரியுமா என்றால் அதற்காகத்தான் நான் காவல் நிலையம் சென்று கேட்டேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரம் இரவு நேரம், இருட்டு நேரம் என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அந்த பகுதியில் வசித்த பக்கத்து வீட்டை சேர்ந்த 4 / 5 பேர் ஓடி வந்தார்கள். அவர்கள் ஓடிவந்தவுடன் கூச்சல் சத்தம் ஏற்பட்டது என்றால் சரி. ஒருவருக்கொருவர் தள்ளுமுள்ளு நடந்ததில் எனக்கு காயம் ஏற்பட்டது, நான் மயக்கமாகிவிட்டேன். அதன்பின்னர் என்னை நீடாமங்கலம் மருத்துவமனையில் யார் அழைத்துகொண்டு போய் சேர்த்தார்கள் என தெரியுமா என்றால் தெரியும். அப்போது எனக்கு நிதானம் இல்லை. நீடாமங்கலம் மருத்துவமனையில் நான் சிகிச்சையிலிருந்தபோதே எனக்கு நிதானம் வந்து விட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து நீடாமங்கலம் மருத்துவமனை சுமார் 2 கி.மீ. தொலைவு

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:44:11 +0530

இருக்கும். அவ்வாறு இருக்கையில் 15 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரி. 2 ம் எதிரி தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் பணியிலிருப்பவர் என்றால் சரி. 6 ம் எதிரி என்னுடைய சின்னம்மா. அவர் பல வருடங்கள் வெளிநாட்டில் வசித்து வந்தார் என்றால் சரி. அவருக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அந்த இடத்திற்கு அருகில் வீடு இல்லையென்றால் தவறு. 1, 3 எதிரிகள் எனக்கு சகோதரர் உறவு, 2 ம் எதிரி எனக்கு மைத்துனர் உறவு. 4 ம் எதிரி தஞ்சாவூர் மாவட்டம் உளூரை சேர்ந்தவர் என்றால் சரி. நான் முதல் விசாரணையில் சொன்னவாறு வழக்கு சம்பவம் இல்லையெனவும் எதிரிகளை தொடர்புபடுத்தி முதல் விசாரணையில் தவறாக சாட்சியம் சொல்லியுள்ளேன் என்றால் தவறு. நான் மருத்துவ சிகிச்சை முடித்து வெளியில் வந்தவுடன் காவல் நிலையம் சென்று வழக்கு விபரம் குறித்து கேட்டதாக சொல்லும் நிலையில் காலதாமதமாக நீடாமங்கலம் நீதிமன்றத்தில் அ.சா.ஆ.3 தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:44:16 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.12/2026**

**Deposition of Witness for Prosecution PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | கரிகாலன் | Father's Name | : | வசந்தகுமார் |
| Village | : | கொத்தமங்கலம் | Taluk | : | நீடாமங்கலம் |
| Calling | : | | Age | : | 41 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of March 2026.**

**(A1 to A6 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது கொத்தமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் Electrician ஆக வேலை பார்க்கிறேன். அ.சா.1 என் அண்ணன், ஆஜர் எதிரிகள் என் உறவினர்கள். 26.01.2019 ம் தேதி என் அண்ணன் பாண்டியனும் அவரது நண்பர் பிரபுவும் இருசக்கர வாகனத்தில் இரவு 8.30 மணியளவில் என் வீட்டிற்கு வந்துவிட்டு 9.30 மணியளவில் வீட்டிலிருந்து கிளம்பினார்கள். நானும் அவர்களை பின்தொடர்ந்து சென்றேன்.

SELVA MUTHU KUMARI — Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.12 14:44:25 +0530

இளையராஜா வீட்டருகே நாங்கள் சென்று கொண்டிருந்தபோது வீரப்பன், இளையராஜா, அய்யப்பன் ஆகியோர் கையில் அருவாளுடனும் கோவிந்தராஜ் இரும்பு கம்பியுடனும் நின்றிருந்தார்கள். நித்யாவும் சந்தோஷ்குமாரியும் அந்த இடத்தில் நின்றார்கள். எங்கள் வண்டியை வீரப்பனும் இளையராஜாவும் வழிமறித்து இதோடு தொலைந்துபோடா என சொல்லி பாண்டியனின் இடது பக்க தலையில் அருவாளால் வெட்டினார்கள். பாண்டியன் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே சாய்ந்தவுடன் அய்யப்பன் தன் கையில் வைத்திருந்த அருவாளால் பாண்டியனின் இடது தொலையில் இதோடு தொலைந்துபோடா என சொல்லி தொடையில் வெட்டினார். கோவிந்தராஜ் தன் கையில் வைத்திருந்த கம்பியால் பாண்டியனின் இடது கை புஜத்தில் அடித்தார். நித்யாவும் சந்தோஷ்குமாரியும் பெரிய கல்லை தூக்கி பாண்டியனின் இடுப்பில் போட்டார்கள். பாண்டியனுக்கும் ஆஜர் எதிரிகளுக்குமிடையே இட பிரச்சனை இருந்து வந்தது. மேலும், வீரப்பன் ஆற்றில் மணல் அள்ளி வியாபாரம் செய்து வந்தது சம்மந்தமாக போலீசார் வீரப்பனை தேடி வந்ததற்கு பாண்டியன்தான் காரணம் என நினைத்து பாண்டியன் மீது வீரப்பன் முன் விரோதம் கொண்டிருந்தார். காயம்பட்ட பாண்டியனை 108 ஆம்புலன்ஸ் மூலம் நீடாமங்கலம் மருத்துவமனை அழைத்து சென்று பின் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:44:44 +0530

நீடாமங்கலம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தனி புகார் தொடர்பாக என்னை விசாரித்தபோது என்னுடைய சட்டையை நாங்கள் நியமித்திருந்த வழக்கறிஞர் வசம் ஒப்படைத்தேன். வழக்கறிஞர் அந்த சட்டையை நீதிமன்றத்தில் ஒப்படைத்தார்.

**குறுக்கு விசாரணை**

பாண்டியன் என் அண்ணன். சாட்சி பிரபு என் பெரியப்பா மகன், எனக்கு சகோதரர் உறவுமுறையாவார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கிராமத்து ரோடு, கிழக்கு-மேற்கு திசையில் உள்ள ரோடு, ரோட்டின் இருமருங்கிலும் வீடுகள் உள்ள பகுதி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து நீடாமங்கலத்திற்கு சுமார் 10 நிமிடத்தில் சென்று விடலாம் என்றால் சரி. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திலிருந்து என் வீடு சுமார் 200 / 300 மீட்டர் தொலைவு இருக்கும். சத்தம் கேட்டு நான் வந்தபோது பாண்டியனின் தலை, உடம்பு மற்றும் சட்டையில் இரத்தமாக இருந்தது என்றால் சரி. நான் பாண்டியனுடன்தான் வந்தேன். அவர் கிளம்பி 2 / 3 நிமிடம் கழித்து அவர் பின்னாலேயே நான் வந்தேன். பிரபுவிடம் நான் கூப்பிட்டு சொன்னேன், பாண்டியனை நாங்கள் நீடாமங்கலம் ஆஸ்பத்திரிக்கு அழைத்து சென்றோம். அதன்பின் பாண்டியனை தஞ்சாவூர் மருத்துவமனைக்கு நான்தான் அழைத்து சென்றேன். 2

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:44:49 +0530

மருத்துவமனைகளிலும் மருத்துவரிடம் பாண்டியனுக்கு ஏற்பட்ட காயம் பற்றி சொன்னேனா என்றால் நீடாமங்கலம் மருத்துவமனை மருத்துவரிடம் நான்தான் சொன்னேன், தஞ்சாவூர் மருத்துவமனையில் என்னை உள்ளே விடவில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் என் வீட்டில் இருந்தேன் என்றால் சரி. நான் தற்போது குறுக்கு விசாரணையில் சொன்ன விபரத்தை நீடாமங்கலம் நீதிமன்றத்தில் என்னை விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். அதுதவிர வேறு எந்த விபரத்தையும் நான் சொல்லவில்லை என்றால் சரி. இளமாறன் மற்றும் ஞானசெல்வி ஆகியோர் எங்கள் உறவினர், எங்கள் தெருவை சேர்ந்தவர்கள் என்றால் சரி. பாண்டியனுக்கு எதிரிகள் மீது நிலம் தொடர்புடைய பிரச்சனையில் வருத்தம் இருந்தது என்றால் சரி. அந்த வருத்தத்தின் தொடர்ச்சியின் காரணமாக இந்த வழக்கு என்றால் சரி. பாண்டியன் என் சகோதரர் என்பதால் நான் இந்த வழக்கில் ஒரு சாட்சியாக சேர்க்கப்பட்டு சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரி.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:44:55 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

**DEPOSITION OF WITNESS**
**Chapter XXIII Code of Criminal Procedure**
**IN THE COURT OF SESSIONS JUDGE**
**TIRUVARUR**
**Sessions Case No.12/2026**

**Deposition of Witness for Prosecution PW 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரபு | Father's Name | : | ராஜகுமாரன் |
| Village | : | நீடாமங்கலம் | Taluk | : | நீடாமங்கலம் |
| Calling | : | | Age | : | 42 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of March 2026.**

**(A1 to A6 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது நீடாமங்கலத்தில் வசித்து வருகிறேன். நான் Electrician வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். பாண்டியன் என் நண்பர். 26.01.2019 ம் தேதி இரவு 8.00 மணியளவில் மோட்டார் சைக்கிளை நான் ஓட்ட பாண்டியன் என் பின்னால் அமர்ந்து பாண்டியனின் தம்பி கரிகாலன் வீட்டிற்கு சென்றோம். பின் 9.30 மணியளவில் நாங்கள் திரும்ப வந்து கொண்டிருந்தபோது வீரப்பன், இளையராஜா,

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:45:00 +0530

அய்யப்பன் ஆகியோர் கையில் அருவாளுடனும் கோவிந்தராஜ் இரும்பு கம்பியுடனும் நின்றிருந்தார்கள். நித்யாவும் சந்தோஷ்குமாரியும் அந்த இடத்தில் நின்றார்கள். எங்கள் வண்டியை வீரப்பனும் இளையராஜாவும் வழிமறித்து இதோடு தொலைந்துபோடா என சொல்லி பாண்டியனின் இடது பக்க தலையில் அருவாளால் வெட்டினார்கள். பாண்டியன் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே சாய்ந்தவுடன் அய்யப்பன் தன் கையில் வைத்திருந்த அருவாளால் பாண்டியனின் இடது தொலையில் இதோடு தொலைந்துபோடா என சொல்லி தொடையில் வெட்டினார். கோவிந்தராஜ் தன் கையில் வைத்திருந்த கம்பியால் பாண்டியனின் இடது கை புஜத்தில் அடித்தார். நித்யாவும் சந்தோஷ்குமாரியும் பெரிய கல்லை தூக்கி பாண்டியனின் இடுப்பில் போட்டார்கள். பாண்டியனுக்கும் ஆஜர் எதிரிகளுக்குமிடையே இட பிரச்சனை இருந்து வந்தது. மேலும், வீரப்பன் ஆற்றில் மணல் அள்ளி வியாபாரம் செய்து வந்தது சம்மந்தமாக போலீசார் வீரப்பனை தேடி வந்ததற்கு பாண்டியன்தான் காரணம் என நினைத்து பாண்டியன் மீது வீரப்பன் முன் விரோதம் கொண்டிருந்தார். காயம்பட்ட பாண்டியனை 108 ஆம்புலன்ஸ் மூலம் நீடாமங்கலம் மருத்துவமனை அழைத்து சென்று பின் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். என்னை போலீசார் விசாரிக்கவில்லை.

SELVA MUTHU KUMARI Digitally signed by SELVA MUTHU KUMARI Date: 2026.03.12 14:45:05 +0530

நீடாமங்கலம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தனி புகாரில் நான் சாட்சியம் அளித்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகே எனக்கு வீடு கிடையாது என்றால் சரி. நானும் பாண்டியனும் சகோதரர் உறவு எனவும் நண்பர் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் எனவும் சொன்னால் தவறு. பாண்டியனை நான்தான் நீடாமங்கலம் மருத்துவமனைக்கு அழைத்துசென்று சிகிச்சையில் சேர்த்தேன் என்றால் சரி. பாண்டியனுக்கு ஏற்பட்ட காயங்கள் பற்றி மருத்துவரிடம் நான்தான் சொன்னேன். அப்போது அங்கு நீடாமங்கலம் போலீசாரம் வந்திருந்தார்கள், விபரத்தை சொன்னேன். மீண்டும் மேல் சிகிச்சைக்காக பாண்டியனை தஞ்சாவூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். தஞ்சாவூர் மருத்துவமனை மருத்துவரிடம் நான்தான் பாண்டியனுக்கு ஏற்பட்ட காயம்பற்றி சொன்னேன். அங்கு வைத்து வழக்கு புகார் என்னால் கொடுக்கப்பட்டது என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு நேரம், இருட்டு நேரம் என்றால் சரி. நான் பார்த்தபோது பாண்டியன் தலை, உடல் முழுவதும் வெட்டு காயத்துடனும் இரத்த காயத்துடனும் கிடந்தார் என்றால் சரி. இந்த

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:45:10 +0530

விபரத்தை நீடாமங்கலம் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளித்தபோது சொல்லியுள்ளேன் என்றால் சரி. பாண்டியனுக்கு எதிரிகள் மீது நிலம் தொடர்பான பிரச்சனை இருந்து வருத்தம் கொண்டிருந்தார் என்றால் சரி. அந்த வருத்தத்தின் தொடர்ச்சியாக இந்த வழக்கு என்றால் சரி. பாண்டியன் எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:45:15 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.12/2026

**Deposition of Witness for Prosecution PW 4**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | இளமாறன் | Father's Name | : | முருகையன் |
| Village | : | முல்லைவாசல் | Taluk | : | நீடாமங்கலம் |
| Calling | : | | Age | : | 49 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of March 2026.**

**(A1 to A6 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது முல்லைவாசலில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் மற்றும் இவ்வழக்கில் காயம்பட்ட பாண்டியனை தெரியும். 26.01.2019 ம் தேதி இரவு 9.30 மணியளவில் இளையராஜா வீட்டருகே காப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள் என சத்தம் கேட்டது, நான் போய் பார்த்தபோது பாண்டியனுக்கு தலையில் 2 வெட்டுக் காயங்கள் இருந்தன. அங்கு சகுந்தலாவும்

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:45:21 +0530

கரிகாலனும் நின்று கொண்டிருந்தார்கள். காயம்பட்ட பாண்டியனை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று நீடாமங்கலம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தனி புகாரில் நான் சாட்சியம் அளித்தேன்.

**குறுக்கு விசாரணை**

பாண்டியன் எனக்கு வேண்டப்பட்டவர், உறவுக்காரர், பக்கத்து ஊர்க்காரர் என்றால் சரி. நான் சத்தம் கேட்டு ஓடிபோய் பார்த்தபோது பாண்டியன் உடல் முழுவதும் இரத்தமாக கிடந்தார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் ரோடு கிழக்கு-மேற்காக கப்பி கற்களால் போடப்பட்ட ரோடு என்றால் சரி, முழுமையாக தார் போட்டிருந்த சீரான சாலையாக இல்லை. பாண்டியன் அவரது இருசக்கர வாகனத்துடன் கீழே கிடந்தார் என்றால் சரி. நான் பாண்டியனிடம் கேட்டபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்தபோது இருசக்கர வானத்துடன் கீழே விழுந்து விட்டதாக சொன்னார்.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:45:27 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,

திருவாரூர்.

# DEPOSITION OF WITNESS
## Chapter XXIII Code of Criminal Procedure
## IN THE COURT OF SESSIONS JUDGE
## TIRUVARUR
## Sessions Case No.12/2026

**Deposition of Witness for Prosecution PW 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பிரபு | Father's Name | : | லோகநாதன் |
| Village | : | முல்லைவாசல் | Taluk | : | நீடாமங்கலம் |
| Calling | : | | Age | : | 40 |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1878, 12th day of March 2026.**

**(A1 to A6 are present).**

**முதல் விசாரணை**

நான் தற்போது முல்லைவாசலில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை பார்க்கிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். 27.01.2019 ம் தேதி பகல் 12.00 மணியளவில் நானும் அறிவழகனும் முல்லைவாசல் பிள்ளையார் கோவில் அருகே சென்று கொண்டிருந்தபோது இளையராஜா வீட்டருகே காவல் ஆய்வாளர் அந்த இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜரும் வரைபடமும் தயார்

SELVA MUTHU KUMARI

Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:45:32 +0530

செய்தார். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் நான் முதல் சாட்சியாகவும் அறிவழகன் 2 வது சாட்சியாகவும் கையெழுத்து போட்டோம். அந்த பார்வை மகஜர் **அ.சா.ஆ.4**. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை**

நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. டைப் அடித்த ஒரு பேப்பரை போலீசார் என்னிடம் கொடுத்தார்கள், அதில் நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். மற்றபடி வேறு எந்த விபரமும் எனக்கு தெரியாது.

என் முன்னிலையில், திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச்சொல்ல கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு அச்சுப் பதிவு எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்பாக கையொப்பம் செய்யப்பட்டது.

SELVA MUTHU KUMARI
Digitally signed by SELVA MUTHU KUMARI
Date: 2026.03.12 14:45:37 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருவாரூர்.